# திருமண மறுப்புக் காரணங்களும் நடத்தைவாத மற்றும் தன்னின உயர்வுவாத கோட்பாட்டுகளும்: ஒரு சமூகவியல் ஆய்வு

# The Concept of High Egoism and Rejections of Marriage Proposals: A Sociological Study

A.N.M. Nawas[1], A.F. Natha[2], M.M.F. Nuseedha[3] & M.A.F. Ashfa[4]

[1,2,3&4]Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Srilanka – Oluvil
nawassharafyhani@gmail.com, aakif5498@gmail.com, binthmawjooth99@gmail.com, ashfaansar6@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் தனது செயற்பாடுகளை சமூக எதிர்பார்ப்புகளுக்கு உட்பட்டும், தனது சூழல் மற்றும் பண்பாட்டு அம்சங்களுக்கு இணங்கியும் அமைத்துக் கொள்கிறான். மேலும் கல்வி, சமூக மாற்றம், நவீனமாக்கல் போன்ற காரணிகளின் செல்வாக்கு ஒரு சூழலில் மாறுபட்ட பண்பாடுகளும், செயலாக்கங்களும் பரந்து காணப்பட ஏதுவாய் அமைகின்றது. இந்நிலையில் கிழக்கு மாகாண மக்களின் பண்பாட்டு அம்சங்கள் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களின் மூலம் பரிகாசம் செய்யப்படுகின்றது. இச்செயற்பாட்டினை தன்னின உயர்வு வாதம் என்று அழைக்கின்றோம். கிழக்கு ஆண்களை ஏனைய பிரதேச பெண்கள் திருமணம் முடிக்க மறுப்பதிலும் இவ்வாதம் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனை ஆய்வுக்கு உட்படுத்தும் வகையில் கிழக்கு மாகாண ஆண்கள் பற்றிய அபிப்பிராயங்கள் திருமணம் செய்வதில் செல்வாக்கு செலுத்துகின்றதா? மேலும் அவ்வாறு முன்வைக்கும் காரணங்களுக்கும் நடைத்தைவாத மற்றும் தன்னின உயர்வு வாத கோட்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக விஞ்ஞானத்தை மையப்படுத்திய இவ்வாய்வானது நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் பண்புசார் அளவை நிலை ஆய்வாக நோக்கப்படுகிறது. வினாக்கொத்து மூலம் பெற்ற முதலாம் நிலைத்தரவுகளையும், இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத் தளங்கள் போன்றவற்றையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் விபரணப் பகுப்பாய்வு முறை மூலம் குறியீட்டு முறையாக்கம் மற்றும் Microsoft Excel என்னும் கணனி மென்பொருள் உதவியுடனும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகளின் படி கிழக்கு மாகாண ஆண்களை ஏனைய மாகாண பெண்கள் திருமணம் முடிப்பதற்கு மறுப்பதில் நடத்தைசார், சூழல்சார், பன்புசார், பன்பாடுசார், பொருளாதரம் சார் மற்றும் உளம் சார் காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:-** தன்னின உயர்வு வாதம், சூழல், நடத்தை, திருமணம்.

## ஆய்வு அறிமுகம்

திருமணம் என்பது உலக வெற்றிக்காகவும், தனிநபர்களை இச்சைவழி பாவங்களிலிருந்து பாதுகாப்பதற்கும், வாரிசுகளை உருவாக்குவதற்கும் இஸ்லாம் ஒழுங்குபடுத்திய ஒரு முறையான வாழ்வியல் அம்சமும் இபாதத்தும் ஆகும். இரு மனங்கள் இணையக்கூடிய திருமணமானது ஒவ்வொருவரையும் ஒழுக்கக் கேட்டில் இருந்து பாதுகாக்கும் கேடயமாகத் திகழ்வதுடன், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உருவாகும் அன்பையும் பாசத்தையும் அங்கீகரிக்கவும், வலுப்படுத்தவும் ஏற்ற முறைமையாக இஸ்லாம் திருமணத்தை வடிவமைத்துள்ளது. திருமணம் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மணமகன், மணமகள், வலீ, இரண்டு சாட்சிகள், ஈஜாப், கபூல் என்பன நிபந்தனைகளாகும். மேலும் இதில் மணமக்களின் முழுமையான சம்மதம், மணமக்கள் திருமணம் முடிக்க தடையாகும் காரணிகளில் இருந்து தவிர்ந்து இருத்தல், மஹர் தொகை என்பனவும் உள்ளடங்கும். (முஸ்னத் அஹ்மத், அபூதாவூத், இப்னு ஹிப்பான்)

‘‘இளைஞர்களே! உங்களில் திருமணத்தின் பொறுப்பைச் சுமக்கும் சக்தி படைத்தவர் மணம் புரிந்து கொள்ளட்டும். ஏனெனில் திருமணம் பார்வையைத் தாழ்த்துகிறது. வெட்கத்தலத்தைப் பாதுகாக்கின்றது’’ என்று நபிகள் நாயகம் அவர்கள் கூறினார்கள்.

இஸ்லாமியத் திருமணம் என்பது ஆண்-பெண் இருவருக்குமிடையே மேற்கொள்ளப்படும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகும். இதைத்தான் திருக்குர்ஆனில், ''சந்தேகமின்றி நீங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து இன்பம் துய்த்திருக்கின்றீர்களே. மேலும் அந்த மனைவியர் உங்களிடம் இருந்து உறுதியான ஒப்பந்தத்தைப் பெற்றிருக்கிறார்களே'' (4:21) என்று இறைவன் குறிப்பிடுகின்றான்.

இவ்வாறு திருமணம் பற்றி இஸ்லாம் பல நிபந்தனைகள், வழிகாட்டல்கள், வரையறைகள் மற்றும் இன்னும் பல விடயங்களை அழகிய முறையில் அணுகுமாறு கூறியுள்ளதோடு நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தியும் காட்டியுள்ளார்கள்.

இலங்கைச் சூழலில் முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களை அல்லது பண்பாட்டு அம்சங்களை எடுத்து நோக்கும் போது, பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபட்ட நடைமுறைகள், செயல் ஒழுங்குகள் காணப்படுகின்றன. அவற்றில் திருமண நடைமுறையை எடுத்து நோக்கும் போது, பிரதேசத்துக்கு பிரதேசம் மாறுபட்ட பண்பாட்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. இப்பண்பாட்டு அம்சங்களின் வேறுபாடு காரணமாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் தொடர்பில் ஏனைய மாகாணங்களில் உள்ள மக்களிடம் கேலியாகப் பார்க்கும் நிலை காணப்படுகின்றது.

திருமணம் அல்லது திருமண பேச்சுவார்த்தை என்று வருகின்ற போது கிழக்கைச் சேர்ந்த நபர்களை திருமணம் முடிப்பதில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் வசிக்கின்ற ஆண்கள் அறிவியல், ஒழுக்கம், பண்பாடு, தொழில் உயர்வு என எவ்வளவு தூரம் உயர்ந்தவர்களாக இருந்தாலும், கிழக்கில் பிறந்தவர்கள் என்கின்ற ஒரே காரணத்தினால் கிழக்கு அல்லாத ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த பெண்கள் திருமணம் முடிப்பதற்கு மறுக்கும் நிலை அல்லது விருப்பமின்மையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்காக அவர்கள் பல்வேறுபட்ட பண்புசார், நடத்தைசார், சூழல்சார் காரணங்களை முன்வைக்கின்றனர்.

இந்த விடயத்தை நாம் நடத்தைவாத கோட்பாடு ரீதியாக நோக்குகின்ற போது பொதுவாக ஒருவருடைய நடத்தை அமைகின்ற விதம் குறித்து நாம் நடத்தைவாத அணுகுமுறையை நோக்குவதன் மூலமாக தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இதனை அறிமுகம் செய்தவர் வாட்சன் ஆவார். மனித நடத்தை தூண்டலுக்கும் துலங்களுக்குமான தொடர்பு பற்றியதாக இவ்வணுகுமுறை காணப்படுகிறது. இதனை ''ளு.சு.வுாநழசல'' எனவும் அழைக்க முடியும். மேலும் பவ்லோ, தோண்டைக் போன்றவர்களும் இதனை வளர்த்துள்ளனர்.

இக்கோட்பாட்டை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் பொழுது இவர்களுடைய நடத்தைகள் அவர்களைச் சுற்றியுள்ள நபர்கள், வாழ்வியல் அம்சங்கள், கலாச்சாரங்கள் நடைமுறைகள், வழக்காறுகள் என பல்வேறு அம்சங்களிலும் தூண்டலினதும் தாக்கத்தினதும் காரணமாகவுமே வேறுபடுவதாக அமையலாம். இதனை உளவியல் உலகில் ஓர் திருப்புமுனையாக அமைந்த நடத்தைவாத அணுகுமுறையானது தெளிவுபடுத்துகின்றது.

இதேபோல சூழலை அடிப்படையாகக் கொண்டு மனிதனுடைய நடத்தைகள் பிள்ளைப் பருவத்திலிருந்தே பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டு ஒரு ஆளுமையாக வெளிப்படுகின்றது என்பதனை நாம் சூழலியல் கோட்பாடு மூலமாக அறிந்து கொள்ளலாம். குழந்தை விருத்தி கோட்பாடுகளில் ஒன்றாக காணப்படுகின்ற சூழலமைப்பு கோட்பாடானது (Bromfenbernner's ecological system theory) ஒவ்வொருவருடைய வளர்ச்சியிலும் அதிகளவு தாக்கத்தை செலுத்தக்கூடிய ஒரு காரணியாக சூழலை அடையாளங் காட்டுகின்றது. சூழலில் காணப்படுகின்ற பல்வேறு அலகுகளின் தாக்கமே ஒரு ஆளுமையாக உருவெடுக்கின்றது என்று வியாக்கியானம் செய்கின்றது. மனித நடத்தைகளுக்கும், வாழும் சூழலுக்கும் இடையிலான தொடர்பினைப்

கண்டறிய முற்படும் போது, சிக்மன் பிரொய்ட்டின் "சூழலும் ஆளுமை வளர்ச்சியில் பங்களிப்பு செய்கின்றது" என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (Stalin, 2016)

மனிதனுடைய நடத்தைக்கும் ஆளுமைக்கும் சூழல் பிரதான காரணியாக அமையும் நிலையில், கிழக்கு மாகாண ஆண்கள் தொடர்பில் ஏனைய மாகாண மக்களிடம் ஏற்பட்டிருக்கும் கருத்தாக்கம் என்பது மீள் பரிசீலினை செய்யப்பட வேண்டியது என்பதை இவ் ஆய்வின் மூலம் கோடிட்டுக் காட்டுவதுடன், கிழக்கு மாகாண ஆண்கள் பற்றிய திருமண மறுப்புக்கான காரணங்களைக் கண்டறிவது இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக உள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

கிழக்கு மாகாண ஆண்களைப் பற்றி ஏனைய மாகாணங்களில் வாழும் மக்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம், அவர்களுடைய பெண்பிள்ளைகளை திருமணம் முடித்துவைப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதே ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

கிழக்கு மாகாண ஆண்கள் பற்றிய அபிப்பிராயங்கள் திருமணத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றதா என்பதைக் கண்டறிவதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் கண்டறியப்படும் காரணங்களுக்கும் நடத்தைவாத மற்றும் தன்னின உயர்வுவாத கோட்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை விபரிப்பது இவ் ஆய்வின் துணை நோக்கமாகும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இஸ்லாத்தில் திருமணத்திற்கான அவசியமும் வலியுறுத்தப்படுகின்ற பாணியும் அவதானிக்கப்பட வேண்டியவை. மார்க்கப்பற்றுள்ள பெண்களை மணந்து கொள்வதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதை அறியலாம்.

''நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களில் இருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும், உங்களிடையே அன்பையும் கிருபையையும் உண்டாக்கி இருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்திக்கக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன'' என்று அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான். (திருக்குர்ஆன் - 30:21)

''நான்கு விடயங்களுக்காகப் பெண் மணமுடிக்கப்படுகிறாள். அவளது செல்வத்திற்காக, அவளது குலச்சிறப்புக்காக, அவளது அழகுக்காக, அவளது மார்க்கப்பற்றுக்காக. நீங்கள் மார்க்கப்பற்றுள்ள பெண்களையே மணந்து கொள்ளுங்கள். உங்களுக்கு நலம் உண்டாகட்டும்'' என்று நபிகளார் நவின்றார்கள். (புஹாரி)

மேற்படி இஸ்லாமிய வழிகாட்டலின் ஊடாக இஸ்லாம் திருமணத்தில் பின்பற்றப்படவேண்டிய பிரதான ஒழுங்காக, நீண்டதொரு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உறுதியளிக்கும் வகையில் மார்க்கப்பற்று அவதானிக்கப்படல் வேண்டும் என்பதை முதன்மைப்படுத்துகின்றது. ஆனால் இன்று திருமண விடயத்தில் உண்மைக்கு புறம்பான விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டு திருமணங்கள் நிராகரிக்கப்படுவதால், இத்தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இவ் ஆய்வின் அவசியமாக மேலோங்கியுள்ளது.

- **ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்**

சமூக விஞ்ஞான விடயத்தை மையப்படுத்திய இவ்வாய்வானது ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் பண்புசார் அளவைநிலை ஆய்வாக நோக்கப்படுகின்றது. நேர்காணல், மற்றும் வினாக்கொத்து மூலம் பெற்ற முதலாம் நிலைத்தரவுகளையும், இரண்டாம் நிலைத்தரவுகளாக பெறப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத் தளங்கள் என்பனவற்றையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் விபரணப் பகுப்பாய்வு மூலம் குறியீட்டு முறையாக்கம், Microsoft Excel என்ற கணனி மென்பொருள் உதவியுடனும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### *3.1 ஆய்வு மாதிரிகள்*

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மூன்றாம் வருட மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### *3.2 மாதிரி எடுப்பு*

அளவு, பண்பு ரீதியிலான இவ்வாய்வு, தெரிவுசெய்யப்பட்ட மாணவிகளில் அனைத்து மாகாணங்களில் இருந்தும் நோக்க மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தி, 15 மாவட்டங்களில் இருந்து (94) மாணவிகளும் கிழக்கு மாகாணத்தில் (26) மாணவிகளும், கிழக்கு மாகாண ஆண்களுக்கு திருமணம் பேசிய அனுபவம் உள்ள (15) மாணவ, மாணவிகளும் என மொத்தமாக 135 பேரிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு அமைந்துள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வு எனும் உயர் பாதையில் பயணிக்கும் ஆய்வாளர்களுக்கு இலக்கிய மீளாய்வு என்பது சிறந்த வழிகாட்டியாகும். இலக்கிய மீளாய்வு முந்தியதில் இருந்து பயனடைதல், இடைவெளிகளை அடையாளம் காணல் போன்ற பயன்களை கொண்டுள்ளது. அந்த வகையில் இவ் ஆய்வுடன் நேரடியாகத் தொடர்புபடும் முந்திய ஆய்வுகளைத் தேடும் போது, இலங்கையில் இதற்கு முன்பு இவ்வாறான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. ஆனால் சீதனம், விவாகரத்து போன்ற தலைப்புக்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இவ் ஆய்வின் தலைப்பு, நோக்கம், காலம் ஆகிய அனைத்து ஆய்வின் உள்ளடக்கங்களில் இருந்தும் இவ் ஆய்வு வேறுபடுகின்றது. அந்த வகையில் இவ் ஆய்வானது இது போன்ற ஆய்வுகளுக்கு ஆரம்பமாகவும் அவ் இடைவெளியை நிரப்பும் வகையிலும் காணப்படுகின்றது.

**ஆய்வு முடிவுகளும் கலந்தரையாடலும்**

கிழக்கு மாகாண ஆண்களை திருமணம் முடிப்பதற்கு ஏனைய மாகாண பெண்கள் மறுக்கின்றார்களா? என்ற வினா எழுகின்ற போது, அவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், ஆய்வுக்கு உட்படுத்தியவர்களில் இருந்து கிழக்கு மாகாண ஆண்களுக்கு திருமணம் பேசிய அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டது.

கிழக்கு மாகாண ஆண்களுக்கு திருமணம் பேசியவர்களிடம் இருந்து பெறப்பட்ட முடிவுகள்.

1- 28 ஆண்களுக்கு திருமணம் பேசப்பட்டுள்ளது.
2- பேசப்பட்ட திருமணங்களில் 27 நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தியவர்களின் அடிப்படையில் 96மூ திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆண்களை திருமணம் முடிப்பதில் ஏனைய மாகாண பெண்களின் மனநிலை யாது என்பதை ஆய்வுக்கு உட்படுத்திய போது, 87% பெண்கள் கிழக்கில் உள்ள ஒருவருக்கு திருமணம் பேசினால் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கருத்தினையும் 12% பெண்கள் ஏற்றுக்கொள்ள முடியும் என்ற கருத்தினையும் வெளிப்படுத்தி உள்ளனர். இவ்விரண்டு தரவுகளின் அடிப்படையில் 91.5% பெண்களுக்கு கிழக்கில் உள்ள ஆண்களை திருமணம் முடிக்க முடியாது என்ற கருத்தினை வெளிப்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வழங்கப்பட்ட வினாக்கொத்தின் அடிப்படையில் நோக்கும் போது கிழக்கு மாகாண ஆண்களை ஏனைய மாகாண பெண்கள் திருமணம் முடிப்பதற்கு மறுப்பதற்கான காரணங்கள்.

| இல | காரணம் | வீதம் % |
|---|---|---|
| 1 | நடத்தை சார் காரணங்கள் | 70 |
| 2 | சூழல் சார் காரணங்கள் | 94 |

| | | |
|---|---|---|
| **3** | **பண்பு சார் காரணங்கள்** | **82** |
| **4** | **பொருளாதாரம் சார் காரணங்கள்** | **96** |
| **5** | **பண்பாடு சார் காரணங்கள்** | **72** |
| **6** | **உளம் சார் காரணங்கள்** | **48** |

மேலே உள்ள தரவுகளின் அடிப்படையில் கிழக்கு மாகாண ஆண்களை திருமணம் முடிப்பதற்கு, ஒட்டு மொத்தமாக யாருக்கும் விருப்பம் இல்லை என்று கூறப்படவில்லை. ஆனால் தமது அனுபவம், பெற்றோரின் அறிவுறுத்தல், சமூகத்தில் பரவலாக நிலவும் கருத்துக்கள் என்பவற்றின் அடிப்படையில், நடத்தை சார், சூழல் சார், உளம் சார், பொருளாதாரம் சார், பண்பு சார் காரணங்களுக்காக மறுக்கப்படுவதாக, பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவதானிக்க முடியும். இங்கு கூறப்பட்டுள்ள விடயங்கள் சமூகம் சார் பண்பாட்டு அம்சங்களுடன் தொடர்புபட்டிருப்பதால், அவற்றை விரிவான தரவுகளின் அடிப்படையில் சமூகக் கோட்பாடுகளுடன் இணைத்து விளக்கப்படுகின்றன.

**நடத்தை சார் காரணங்கள்**

நடத்தை என்பது கண்ஊடாகக் காணக்கூடிய புறச்செயல்களையும், சிந்தனையால் நிகழும் உளச்செயல்களையும் உள்ளடக்கியது. (K.Kajavinthan, 2013) மனிதனின் புறச்செயல்களை உற்று நோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை எவ்வாறு அகத்தே நிகழும் சிந்தனையோட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்பதையும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகள் எவ்வாறு அவனது நடத்தையை பாதிக்கப்படுகின்றது என்பதுமாகும். உளவியல் துறை ஆய்வாளர்கள் ஆய்வுகள் மூலம் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக சூழலை அடையாளப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்க உளவியல் அறிஞரான ஜோன் வாட்சனின் கருத்துப்படி, சூழ்நிலை மனித செயற்பாட்டினை அல்லது நடத்தையினைத் தீர்மானிக்கின்றது என்கிறார். மேலும் ஸ்கின்னர் சூழ்நிலைத் தூண்டுதலே நடத்தையை உற்றுநோக்கக் காரணமாக அமைகிறது என்கிறார். அறிஞர்களின் கருத்துப்பிரகாரம் நடத்தைக்கும் அவர் வாழும் சூழ்நிலைக்கும் தொடர்பு உண்டு என்பதை உணர்த்துகின்றது. இதனால் சூழ்நிலையே ஒருவரது நடத்தையையும், ஆளுமையையும் தீர்மானிக்கின்றது. எனவே, மனிதர்களின் புறச்செயல்களை உற்று நோக்கும் போது சுற்றுச் சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் நடத்தைகள் பாதிக்கின்றன என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

ஆய்வுக்கு உட்படுத்தியவர்களின் இருந்து பெறப்பட்ட, திருமணத்தை மறுப்பதற்கான நடத்தை சார் காரணிகளை உற்று நோக்கும் போது பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- கடும் போக்குடன் நடந்து கொள்ளக்கூடியவர்கள்
- நேர்மையின்மை.
- மோசடி செய்யக் கூடியவர்கள்.
- ஏனைய பிரதேச மக்களை மதிக்காதவர்கள்.

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள காரணங்களுடன் அடிப்படையில் கோட்பாடுகள் தொடர்பு பட்டிருப்பதை நோக்குதல் அவசியமாகும்.

நாம் ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதுடன், சுற்றியுள்ள தூண்டல்களுக்கேற்ப நாம் பல துலங்கல்களைச் செய்து வாழ்கிறோம். ஒருவனது வளர்ச்சியையும், நடத்தையையும் அவனுக்குப் புறத்தேயிருந்து கட்டுப்படுத்தும் காரணிகள் அந்த நபரின் "சூழ்நிலை" எனப்படும்.

எனவே சூழ்நிலை என்பது மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனைச் சுற்றியிருக்கும் பல்வேறு விதமான தூண்டல் - துலங்கல் ஆகியவற்றின் தொகுப்பேயாகும். ஒரு குழந்தையின் நடத்தையைப் பாதிக்கும் மற்றவர்களின் செயல்கள், போக்குகள்…., மனப்பான்மை போன்ற சமூகச் சூழ்நிலை ஆகிய அனைத்தும் சூழலில் அடங்கும்.

தாயின் வயிற்றில் வளரும் சிசுவிடம்…. அந்தத் தாயின் உடல் நிலை, மனவெழுச்சி, உணவின் தன்மை, சுற்றுச்சூழல் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனைப் பிறப்பிற்கு

முன்புள்ள சூழ்நிலை என்பர். குழந்தை பிறந்த பிறகு ஏற்படுகின்ற சூழ்நிலையை பிறப்பிற்குப் பின்புள்ள சூழ்நிலை என்பர். ஒரு தனிமனிதனின் வளர்ச்சியைச் சூழ்நிலை பாதிக்கிறது. வெவ்வேறு நாட்டில் பிறந்தவர்களின் உடல் நிலை, நிறம், குணம் போன்றன மாறுபடுகின்றன. சாந்தமான பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் சில வன்நடத்தையுள்ள குழந்தைகளாக இருப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் சூழ்நிலைதான். எனவே, தனி மனிதனின் வளர்ச்சி, சூழ்நிலையையும் பொறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உளவியலாளர் கருத்துப்படி ஒருவனுடைய சூழ்நிலை என்பது, அவன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனைச் சுற்றியிருக்கும் பல்வேறு விதமான தூண்டல்களின் தொகுப்பாகும். அவனது வளர்ச்சி, அவனுக்குத் தனது கூழ்நிலையில் இருந்து கிடைக்கின்ற தூண்டல்களின் தன்மையை ஒட்டியே அமைகிறது.

ஒரு குறிப்பிட்ட கூழ்நிலை வளர்ச்சியைத் தூண்டுவதாக அமையலாம். மற்றொரு வகையான கூழ்நிலை வளர்ச்சியினைப் பாதிப்பதாகவும் அமையலாம். சாதகமான குழ்நிலையில் வளரும் குழந்தைகளின் உள்ளார்ந்த திறன்களும், ஆற்றல்களும் முழுமையாக வளர்கின்றன. மாறாக, பாதகமான சூழ்நிலையில் வளரும் குழந்தைகளின் சிந்தனை வளர்ச்சித்திறன், நுண்ணறிவு வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி ஆகியவை பெரிதும் பாதிக்கப்படுகின்றன. எனவே, ஒருவனது வளர்ச்சியிலும். முன்னேற்றத்திலும் பெரும்பங்கு வகித்து, அவன் இன்றைக்கு எப்படி ஆகியிருக்கிறான் என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகக் சூழ்நிலை அமைகிறது. எடுத்துக்காட்டாக:

**சூழலின் செல்வாக்கு பற்றிய ஆய்வுகள்**

- லை சென்கோ என்னும் அறிஞர்: சூழ்நிலையானது பரம்பரை அலகுகளின் அமைப்பையும் அதிலிருந்து எழும் பண்புகளின் இயல்புகளையும் மாற்றும் வலிமை பெற்றதெனக் கருதுகின்றார்.
- டி கண்டோல்‘ பாக்லி போன்றோரின் ஆய்வுகள்: ஒருவனது அறிவுத்திறனும் அவனது சூழ் நிலையின் தன்மையைப் பொருத்ததாகும் என நிறுவியுள்ளன.
- மாறுபட்ட சூழ்நிலைகளில் தனித்தனியே வளர்க்கப்பட்ட ஒரு கருவிரட்டையர் பற்றிய ஆய்வுகள்: இவ் விரட்டையர்களின் வளர்ச்சியிலும் நடத்தை முறைகளிலும் அவர்களது சூழல்கள் பெருமளவில் வேறுபாடுகளை தோற்றுவித்துள்ளன என்ற முடிவுக்கு வந்துள்ளன.
- சிறில் பேர்ட் போன்றோர் குழந்தைகள் நெறி பிறழ்வதற்கும் பின்னர் குற்றவாளிகளாவதற்கும் அவர்களது சூழ்நிலையே முக்கிய காரணம் என கூறியுள்ளனர்.
- இயல்பாக போதிய நுண்ணறிவை பெற்றிராத குழந்தைகளும் பல்வேறு சிறப்பு முறைகளின் வழியே கற்பிக்கப்படின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெறுகின்றனர் என்பது இன்றைய கல்வியாளர்களின் கருத்து.
- தீவிர சூழலியல் வாதியான வாட்சன் (Watson) என்பவர் குறிப்பிடும் போது, என்னிடம் ஆரோக்கியமுள்ள சில குழந்தைகளை ஒப்படையுங்கள், குழந்தைகளின் மரபுநிலையைப் பற்றி எனக்கு கவலையில்லை. அவர்கள் எத்தன்மையுள்ளவர்களாக வளர வேண்டும் என்று முன்கூட்டியே சொல்லிவிடுங்கள். சூழ்நிலையின் உதவி கொண்டே அவர்களை பேரறிஞர்களாகவோ, பெருங்குற்றவாளிகளாகவோ உருவாக்குகிறேன் என்றார். (பாலன்) அவர் கருத்துப்படி அனுபவம், பயிற்சி கல்வி ஆகியன யாவும் மனித வளர்ச்சிக் கட்டங்களில் சூழ்நிலையின் செல்வாக்குகளாகும்.

ஆளுமை வளர்ச்சியில் பண்பாடு பெரிய அளவில் செல்வாக்குக் செலுத்துகிறது. ஒவ்வொருவரும் தாங்கள் சார்ந்திருக்கும் சமுதாயத்தில் சமூக வாழ்க்கையின் மூன்று முக்கிய கூறுகளான: தொழில், திருமணம். பிறருடன் பொருத்தமான உறவு கொண்டு பழகுதல் ஆகியவற்றில் வெற்றி பெற முனைகின்றன.

இவைகளைப் பல்வேறு சமூக நிலையங்கள் உருவாக்குகின்றன. உடை உடுத்தும் முறை. உண்ணும் முறை. நம்பிக்கைகள், மரபுகள் ஆகியவைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம்,

வாழ்க்கை மதிப்புக்கள் ஆகிய பண்பாடுகளில் காணப்படும் வேற்றுமைகள், வெவ்வேறு பண்பாட்டுச் குழலில் வளரும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் பிரதிபலிக்கின்றன. புவியியல் அமைப்புக்கூட பண்பாட்டிற்கும், நல்ல ஆளுமை வளர்ச்சிக்கும் காரணமாக அமையும். குளிர்ப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகள், பாலைவனப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகள் ஆகியோரின் ஆளுமை வளர்ச்சியில் பெரிய வேறுபாடுகளைக் காணமுடியும். இம்மாதிரியாகப் பண்பாட்டுச் சூழ்நிலையும், புவியியல் அமைப்பும்கூட குழந்தைகளுடைய ஆளுமையில் பங்கு வகிக்கின்றன.

இலங்கையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழ்கின்ற மக்கள் பல்வேறுபட்ட நடத்தைகளை கொண்டிருப்பர். அவர்களிடம் காணப்படும் நடத்தைகள் வித்தியாசமானவை. இதற்கு பிரதான காரணமாக சூழலை குறிப்பிடலாம். ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து மரணிக்கும் வரை அவன் வாழுகின்ற சூழல் தாக்கம் செலுத்துகின்றது என்ற கோட்பாட்டின் அடிப்படையில், கிழக்கு மாகாண மக்களிடம் மாறுபட்ட நடத்தைக் கோலங்கள் காணப்படுகின்றன. வேறொரு சூழலில் இருந்து பார்ப்பவர்கள் அதனை வித்தியாசமாக நோக்குவர். மேலும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் காலநிலை வித்தியாசமானது. மலையகப்பகுதியை நோக்கினால் இயற்கை எழிலால் சூழப்பட்ட கண்ணுக்கு குளிர்ச்சியான ஓர் இடமாகக் காணப்படுகின்றது. இதனால் அங்கு வாழ்பவர்களுக்கு இக்குளிர்ச்சி, இயற்கை என்பன மனதை ஆறுதல்படுத்தக் கூடியதாகக் காணப்படுகின்றது. கரையோரப் பிரதேசங்களை நோக்கும் போது மிகவும் சூடான, வரட்சியான பிரதேசமாகக் காணப்படுகின்றது. இதனால் மனிதன் வேலைகளில் ஈடுபடும் போது சோர்வு, எரிச்சல், களைப்பு என்பன ஏற்படுகின்றது. ஆகவே நடத்தைகளில் மாற்றம் இருப்பது மனிதர்களின் தவறில்லை. மாறாக சூழலே அவனது நடத்தைகளை மாற்றியமைக்கின்றது.

### பண்புசார் விடயங்கள்

வினாக்கொத்துலிருந்து பெறப்பட்ட காரணங்களுள் சில காரணங்கள் பண்பு சார்ந்தவையாக காணப்படுகின்றன. அதாவது கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் காணப்படுகின்ற பெண்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆண்களின் பண்பு ரீதியான, அவர்களின் அன்றாட பழக்கவழக்கங்கள் தொடர்பான பல காரணங்களை முன்வைக்கின்றனர். அவர்களுடைய குணவியல்புகள், பண்புகள், ஒழுக்க விழுமியங்கள், குணாதிசயங்கள் போன்ற அடையாளங்களை கூறுகின்றனர்.

- நம்பிக்கையின்மை
- உறுதித்தன்மை குறைவு
- நாங்கள் எனும் ஆணவம்

ஒப்பீட்டளவில் எந்த ஒரு காரணமும் அதிகமானவர்களால் கூறப்படவில்லை. ஒட்டுமொத்தமாக பெறப்பட்ட தரவுகளின் அதிகமானவர்கள் பண்புசார் காரணங்களை வலியுறுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். என்றாலும் இவ்வாறான பண்புகள் குறைபாடுகள் உண்மையில் கிழக்கு மாகாண ஆண்களிடம் காணப்படுகின்றனவா? என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியது.

### பண்பாடு சார் காரணங்கள்

பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கின்றது. மனிதன் பிறந்த நாள் முதல் முதற் கொண்டு இறக்கும் நாள் வரை அவனது பண்பாட்டைச் சமுகமயமாக்கம், பண்பாட்டு மயமாக்கம் போன்றவற்றினுடாக கற்கிறான். பண்பாடு எனும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவரான எட்வர்ட் பர்னட் டைலர் என்பவர் 1871இல் தனது “தொன்மைப் பண்பாடு” எனும் நூலில் “பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்.” என்கின்றார்.

ஆய்வுக்கு உட்படுத்தியவர்கள் வழங்கிய பண்பாடு சார்ந்த காரணிகளை நோக்கினால்

- சீதனம்
- சட்டதிட்டங்கள் (மணமகன் அன்றாட வாழ்க்கையில் சட்டதிட்டங்கள் போடக்கூடியவராக காணப்படல்).
- பெண்களை வேலைக்கு அனுப்புவதில்லை

இவ்வாறான மூன்று காரணிகள் பண்பாடு சார்ந்த காரணிகளாக வினாக்கொத்துகளில் இருந்து பெறப்பட்டாலும், சீதனமே 98% கூறப்பட்டுள்ள விடயமாகும்.

பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தில் சீதனம் பெண்கள் தரப்பில் இருந்து பெறப்படுகிறது. இஸ்லாமிய ஷரியத்தில் எந்த ஒரு இடத்திலும் சீதனத்திற்கான அங்கீகாரத்தினையும் காணமுடியாது. சீதனம் பெறுகின்ற நடைமுறையானது கிழக்கில் மிக நீண்டதொரு வரலாற்றுடன் தொடர்புபட்டதாகும். முன்னைய கால செல்வந்தர்கள் தங்களுடைய பெண்களை திருமணம் செய்து கொடுக்கும்போது தங்களிடம் உள்ள சொத்துக்களில் ஒரு பங்கினை திருமணம் செய்யும் பெண்ணுக்கு வழங்கினர். இந்த நடைமுறையே பிற்காலத்தில் அனைவராலும் சீதனமாக வழங்கப்படுகின்றதொரு நடைமுறை காணப்படுகின்றது. தற்காலத்தில் சீதனம் இல்லாத திருமணங்கள் மிகவும் அதிகமாக காணப்படுகின்றன. சீதனம் பெறுவது மணமகனின் அந்தஸ்தையும், வழங்குவது மணமகள் தரப்பின் கௌரவத்தையும் குறிக்கும் அடையாளமாக மாறியுள்ளது. அதிலும் ஒவ்வொரு தொழில் புரியும் மணமகனுக்கும் ஒவ்வொரு பெறுமதி என கிழக்கு சமூகத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உயர் அரச அதிகாரிகள், நடுத்தர தொழில் புரியும் உத்தியோகத்தர்கள், மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிவோர், தினக் கூலிகள் என அவை வேறுபடுகின்றன (சலீம், 2016) சீதனத்தினால் மோசடி, ஆடம்பர வாழ்வு, பண மோகம், சொத்து பிழையாகப் பிரிக்கப்படல் போன்ற பல சமூகப் பொருளாதார விளைவுகள் ஏற்பட்டாலும் சீதனம் இன்றி இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்வது கிழக்கில் சவால் மிக்கதொரு காரியம் ஆகும். (M.Y.M. சுகீரா, M.C.S. சாதிபா) இதுவே கிழக்கு ஆண் மக்களை கிழக்கு மாகாணம் அல்லாத ஏனைய மாகாணப் பெண்கள் நிராகரிப்பதற்கு முக்கியமான காரணி ஆகும்.

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள சீதனம், சட்டங்கள் அதிகம், பெண்களின் தொழில் ஆகிய விடயங்களில் சமூக மாற்றம் இடம் பெற்று வருவதை நோக்க முடியும். மோரிஸ் கின்ஸ் வேர்க் குறிப்பிடும் போது "சமூக செயன்முறையில் காணப்படுகின்ற நடைமுறை (விழுமியம், நியமம், உளப்பாங்கு) என்பவற்றில் ஏற்படும் மாற்றத்தை சமூக மாற்றம்" என்றார். (A.Rameez, 2016) இக்காரணிகள் இன்று மாற்றத்திற்கு உட்பட்டதன் பெறுபேறு அதிகமான பெண்கள் தமது பல்கலைக்கழக பட்டப்படிப்பு, வெளிநாட்டில் உயர் கல்வி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணி புரிவோரின் எண்ணிக்கை என்பவற்றை நோக்கும் போது, பெண்கள் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள கூடாது, கல்வி கற்கக் கூடாது என்ற நிலையில் இருந்து சமூக மாற்றம் இடம்பெற்றுள்ளதை உறுதிப்படுத்த முடிகின்றது. எவ்வாறு ஆரம்பத்தில் ஆங்கில மொழியை படிக்கக்கூடாது என்ற நிலையில் இருந்து சமூக மாற்றம் முஸ்லிம் சமுகத்திடம் ஏற்பட்டதோ, அதுபோன்று இந்நிலைகளும் மாற்றம் கண்டுவருகின்றது.

மேலும் கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் விவாகரத்துக்கான காரணங்களை கண்டறியும் நோக்கில் Ameer Rushana, Ahamed Sarjoon Razick ஆகியோரால் அநுராதபுர மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட "விவாகரத்து முஸ்லிம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள்: அனுராதபுர மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு", எம்.எம்.எப். ஸம்ஹா, எம்.ஐ.எம். தாரிக், எம்.டி.எப். ருமானா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட " விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் - களுத்துறை மாவட்ட முஸ்லிம்களை மையப்படுத்திய ஆய்வு'' எனும் ஆய்வுகளில், பெண்கள் தரப்பின் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நோக்கும் போது "கணவனை கேவலப்படுத்துதல், கணவனின் அனுமதியின்றி வெளியேறுதல், அடங்காப்பிடாரித்தனம், கணவனை அடிக்கடி குறைகூறுதல், கணவனை அலட்சியம் செய்தல், அன்னிய ஆடவருடன் நெருங்கிப் பழகுதல்" போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிழக்கு தவிர்ந்த ஏனைய

மாகாண பெண்களின் சூழல் அவர்களிடம் செலுத்தியுள்ள தாக்கத்தினையும் அவதானிக்க முடிகிறது.

**சூழல் சார் விடயங்கள்**

சூழல் காரணிகளை நோக்கும் போது பெரும்பாலானவர்களின் பிரச்சினையாக தூரம் என்ற காரணி முன்வைக்கப்படுகின்றது. திடீர் மரணங்கள், சுகயீனங்கள், திருமணங்கள் போன்ற இன்ப துன்ப நிகழ்வுகளில் உடனே தனது சொந்த ஊருக்கு வரமுடியாமல் போதல். ஊருக்குச் செல்வதாயினும் அதற்குரிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல், கணவனின் விடுமுறை நாட்கள் போன்ற பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றது. மேலும் வேறுபட்ட காலநிலை, வேறுபட்ட கலாசார பண்புகள் காணப்படுகின்றன. இச்சூழலிற்கு பழக்கப்படுவதற்குக் குறைந்தது ஒரு வருடமேனும் செல்லும். இதனுள் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

**பொருளாதாரம் சார் காரணங்கள்**

இவ் ஆய்வில் பெறப்பட்ட காரணிகளில் 96% பெண்கள் கூறிய காரணம் பெண் தரப்பினர் வீடு கட்ட வேண்டும் என்பதாகும். கிழக்கில் திருமணம் முடிக்கும் போது ஆண்களுக்கு வீடு வழங்க வேண்டிய சூழ்நிலைக் கைதிகளாக பெற்றோர் மாற்றப்படுகின்றனர். இதற்கான பொருனாதார சுமை பெற்றோரின் மீதும், சகோதரர்கள் மீதும் சுமத்தப்படுகின்றது. ஆனால் கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஒரு ஆண் ஒரு வீட்டினை மாத்திரம் கட்ட வேண்டிய அவசியத்தில் உள்ளான். மேலும் இஸ்லாமிய முறைப்படி ஆண்களின் வீட்டுக்கு திருமணத்தின் பின்னர் பெண்கள் செல்கின்றனர். எனவே, இந்நடைமுறையானது பெரும்பாலான பெண்கள் கிழக்கில் உள்ள ஆண்களை திருமணம் செய்வதில் இருந்தும் தூரப்படுத்துகின்றது.

**உளம் சார் காரணங்கள்**

உளம் சார் காரணங்கள் என்பது ஆய்வுக்கு உட்படுத்தியவர்களிடம் காணப்பட்ட அறிகை சார் காரணங்களாகும். இக்காரணங்கள் தமது அனுபவம், நண்பர்கள் மூலம் அறிந்தவை, பெற்றோர் மூலம் அறிந்தவை, கிழக்கு மக்கள் தொடர்பில் பொதுவாக பேசப்படும் விடயங்கள் என்ற வகையில் அடையாளப்படுத்தப்பட்டவையாகும்.

- ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பெண்களை ஏமாற்றி முடிப்பவர்கள்.
- தொழிலுக்காக செல்லும் இடங்களில் திருமணம் முடித்து ஏமாற்றுபவர்கள்.
- மட்டக்களப்பான் என்றால் ஏமாற்றுக்காரன்.

**மேலே கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களிலும் மிகப்பிரதானமான ஓர் கொள்கை செல்வாக்குச் செலுத்துவதை இவ் ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.**

ஒவ்வொரு பண்பாடும் அதற்கே உரிய மதிப்பைப் பெற்று விளங்குகிறது. அதன் பழக்க வழக்கங்களும் பிற நடத்தை முறைகளும் அப்பண்பாட்டோடு மிகவும் ஒத்திசைவு பெற்றுள்ளது. ஒரு பண்பாட்டை உயர்ந்தது என்றோ மற்றையது தாழ்ந்தது என்றோ கூற முடியாது. எந்தவொரு பண்பாட்டினரும் அவர்களின் சொந்தப் பண்பாட்டு முறைகள் சிறந்தது எனக் கருதுவர். அவர்களின் பழக்கவழக்கங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட பண்பாட்டினரைத் தாழ்ந்தவர்கள் எனவும் கருதுவர். இது இயல்பு. ஆனால் உண்மை அல்ல. பண்பாட்டுச் சார்புடைமைக் கருத்துப்படி ஒரு பண்பாட்டின் மதிப்புகள், செயல்முறைகள் அந்தந்த பண்பாட்டோடு சார்புடையது நல்லது, கெட்டது உயர்ந்தது, தாழ்ந்தது பயனுள்ளது, பயனற்றது என்பவை அனைத்தும் ஒரு பண்பாட்டிற்குள் மட்டுமே கையாளப்பட வேண்டிய சொற்கள். ஒரு பண்பாடு உயர்ந்தது என்றோ தாழ்ந்தது என்றோ கூறுமளவிற்கு அனைத்து பண்பாடுகளையும் கடந்த பொதுக்கூறுகள் இல்லை. ஆகவே, பண்பாடுகளை ஒப்பிட்டு மதிப்பிட முடியாது. (பாரதி, 1999)

**தன்னின உயர்வு வாதம்**

பண்பாட்டு முறை என்பது மனிதர்களுக்கு மட்டுமே உரியது. ஆனால் அனைவரும் ஒன்றுபட்டவர்கள் அல்லர். உயிரியல் கூறுகளால் மட்டுமே அனைவரும் ஒன்றுபடுகின்றனர். பண்பாட்டால் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து காணப்படுகின்றனர். ஒவ்வொரு பண்பாட்டைச் சேர்ந்தவர்களும் அவர்கள் வாழும் முறையால் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபடுகின்றனர். இவர்கள் பிறந்தது முதல் அவரவர்களின் பண்பாட்டு முறையிலேயே ஊறிவிடுவதால் அவரவர் வாழ்க்கை முறையே மிகவும் ஏற்றது என்றும் உயர்வானது என்றும் கருதுகின்றனர். பிற பண்பாட்டினரின் பழக்கவழக்கங்கள் புதியதாகவும், பழக்கமில்லாமலும், வேறுபட்டும் உள்ளதால் அவற்றைத் தாழ்வாகக் கருதுகின்றனர். அதாவது தன் சொந்தப் பண்பாட்டின் முறையை அளவுகோளாகக் கொண்டு பிற பண்பாடுகளை மதிப்பிடும் பாங்கினை இது குறிக்கறிது. இதன் இறுதி நிலைதான் சொந்தப் பண்பாடே உயர்ந்தது என முடிவு செய்வதாக அமைகிறது. இவ்வகைக் கருத்தே தன்னின உயர்வு வாதம் அல்லது தன்னினப்பற்று எனப்படும். இது பொறாமை, போட்டி உணர்ச்சிகளில் இருந்து மாறுபட்டது. இவ்வுணர்வானது வெவ்வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர்களிடையேயும், சில சமயங்களில் ஒரே பண்பாட்டுச் சமூகத்தைச் சேர்ந்த வெவ்வேறு மதம் அல்லது குழுக்களிடையேயும் காணப்படும். (பாரதி, 1999)

இனமையக் கொள்கையின் முதன்மையான குணம் பிற பண்பாட்டு முறைகளை அளவிடுதலாகும். இங்கு தங்கள் பண்பாட்டுமுறைகளான நம்பிக்கைகள், மதிப்பீடுகள், வாழ்வின் பழக்கங்கள் முதலானவற்றை உயர்ந்தவனென்றும் பிற பண்பாட்டு முறைகள் தாழ்ந்தன அல்லது பிற்போக்கானவை என்றும் மக்கள் கருதுவதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். மக்கள் தம் பண்பாட்டைப் பற்றி உயர்வு மனப்பான்மை கொண்டு, பிற சமூகத்தினரின் பழக்கவழக்கங்களை என்னி நகையாடுகின்றனர். இதற்கான காரணம் ஏனைய பண்பாடுகள் குறித்த அறிவின்மையும், தங்கள் பண்பாடு மட்டுமே பண்பாடுகளில் உயர்ந்தது எனும் எண்ணமும் ஆகும். (SM.Ayoob, 2004-2005)

இஸ்லாமிய சமூகத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் தங்களை உயர்வானவர்களாகவே கருதுகின்றனர். ஆனால் அவர்கள் மார்க்கம் ஏனையவர்களும் அவர்கள் பண்பாடுகளும் இழிவானவை அல்ல எனவும் கூறுகின்றது. "மு.ஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறியதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம் (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம் இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள் ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும் எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள்" (ஸூரத்துல் ஹுஜுராத் 11).

இலங்கை முஸ்லிம்களில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மூன்று வேளை சாப்பிடுவார்கள். இதனை மேல் மாகாண முஸ்லிம்கள் நக்கலாகப் பார்ப்பார்கள். அதே போல் உணவு முறையிலும் இது நிகழ்கின்றது. கிழக்கு மாகாணத்தில் இறைச்சி சமைக்கும் போது மரவெள்ளிக் கிழங்கு சேர்க்கப்படும். இதனை மேல் மாகாண முஸ்லிம்கள் கிண்டலாக பார்ப்பார்கள். இது தவிர "மட்டக்களப்பான்" என்ற பிரிகோடு இலேசாக மேல்மாகாண முஸ்லிம்களிடையே காணப்படுகின்றது. (SM.Ayoob, 2004-2005)

இவ்வாதத்தின் அடிப்படையில் நோக்கும் போது கிழக்கு மக்கள் தொடர்பில் ஏனைய மக்களிடம் காணப்படும் அபிப்பிராயங்களில் தன்னின உயர்வு வாதம் செல்வாக்கு செலுத்துவது கண்டறியப்பட்டது.

**விதந்துரைகளும் ஆலோசனைகளும்**

கிழக்கு பிராந்திய ஆண்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள திருமண மறுப்புக்கான காரணங்களை நோக்கும் போது, அவற்றில் இருந்து இன்னும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியதன் இடைவெளியை இவ் ஆய்வு கண்டுபிடித்துள்ளது.

- மாவட்டங்களுக்கு இடையில் பட்டம் பெற்று தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்களின் அளவு நிலை பற்றிய ஆய்வினை இவ் ஆய்வு பரிந்துரை செய்கின்றது.
- கிழக்கில் உள்ள ஆண்கள் ஏனைய மாகாணங்களில் திருமணம் முடித்து ஏமாற்றிய மற்றும் விவாகரத்து பெற்ற விடயங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இவ் ஆய்வு பரிந்துரை செய்கின்றது.
- சுயபூர்த்திக் கிராமங்களில் வாழும் மக்களின் திருமண அபிப்பிராயம் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இவ் ஆய்வு பரிந்துரை செய்கின்றது.

## References

Rameez. A. (2016). *சமூகவியல் சமூக மானியடவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* chemamdu poththakasalai.

Kajavinthan. K. (2013). *உளவியல்.* இலங்கை: குமரன் புத்தக இல்லம்.

SM.Ayoob. (2004-2005). தன்னின உயர்வு வாதமும், அயலினப்பற்றுவாதமும் இலங்கையை மைப்படுத்திய ஆய்வு. *அதிர்வு*, 36-38.

Stalin, R. (2016). *personality Theories& Developmental Theories.* Jaffna: Jeevanathy, Kalaiham,Alvai.

பாரதி, ப. (1999). *பண்பாட்டு மானிடவியல்.* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

பாலன், ய. (n.d.). *கல்வி உளவியல் அடிப்படைகள்.* கொழும்பு: Dhwani .